DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC -25/2023

Prosecution witness - PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மாயக்கண்ணன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused produced.)

05.12.2024- 05.00 PM

முதல் விசாரணை:-

1. நான் கடலாடியில் குடியிருந்து பேருந்து நிலையத்தில் எலெட்ரானிக்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும்.

2. எனக்கு சொந்தமான வீடு செல்லப்பாண்டியன் வீட்டின் அருகில் உள்ளது. நான் வெளியில் வாடகைக்கு இருந்து வருகிறேன். எனது வீடு பழைய வீடு என்பதால் பழைய எலெட்ரானிக் சாமான்களை அந்த வீட்டிற்குள் போட்டு வைத்திருந்தேன்.

3. பின்னர் 30.12.2022 ம் தேதி காலை செல்லப்பாண்டி என்பவரது வீட்டின் பூட்டை உடைத்து திருட்டு நடந்திருப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது. அதை பார்ப்பதற்காக நான் செல்லப்பாண்டியின் வீட்டிற்கு சென்றேன்.

4. எனது வீட்டின் பூட்டும் உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே போடப்பட்டிருந்த பொருட்கள் அனைத்தும் அப்படியே இருந்தது. அருகில் குடியிருந்து வந்த கருப்பசாமி, சங்கர் ஆகியோரது வீட்டின் பூட்டும் உடைக்கப்பட்டிருந்தது. பொருட்கள் எதுவும் திருடுபோகவில்லை. பின்னர் காவல் நிலையம் சென்று செல்லப்பாண்டியன் புகார் அளித்தார்.

5. பின்னர் 1 வாரம் சென்று போலீசார் எங்களை அழைத்தார்கள்.

நாங்கள் காவல் நிலையம் சென்றபோது போலீசார் ஒரு நபரை காண்பித்தார்கள். அவரது பெயர் சேவுகராஜன் என்றும், கமுதி பகுதியை சேர்ந்தவர் என்றும் சொன்னார்கள். ஆஜர் எதிரிதான் அவர். என்னை போலீசார் சம்பவம் குறித்து விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –

இல்லை.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)